# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.2.1.B

எண்ணியல் - சரியா தவறா மற்றும் கூட்டுக - தநாஅபு - பயிற்சி 1.1.2-3

## எண்ணியல் - சரியா தவறா மற்றும் கூட்டுக - தநாஅபு - பயிற்சி 1.1.2-3

2) சரியா, தவறா எனக் கூறுக.

i) (-32)-ன் கூட்டல் எதிர்மறை (-32).

» $(-32) + (-32) = (-64) \neq 0$

ஒரு எண்ணை அதன் கூட்டல் எதிர்மறையுடன் கூட்டினால் விடை பூஜ்ஜியம் கிடைக்கவேண்டும். எனவே, இது **தவறாகும்.**

ii) (-90) + (-30) = 60

» $(-90) + (-30) = (-120) \neq 60$

இரு குறை முழுக்களைக் கூட்டினால் கிடைக்கும் விடை ஒரு குறை முழுவாகவே இருக்கும். மட்டுமல்ல, கொடுக்கப்பட்டுள்ள விடையின் மதிப்பு மாறாக இருக்கிறது. எனவே, இது **தவறாகும்.**

iii) (-125) + 25 = -100

» $(-125) + 25 = (-100)$


ஒரு குறை முழு மற்றும் ஒரு மிகை முழுவை கூட்டும் பொழுது கிடைக்கும் விடை அவற்றின் வேறுபாடாகவும் மற்றும் பெரிய எண்ணின் குறியைச் சார்ந்தே அமையும். எனவே, இது **சரியாகும்.**

3) கீழ்க்கண்டவற்றைக் கூட்டுக.

i) எண் கோட்டைப் பயன்படுத்திக் கூட்டுக: 8 மற்றும் -12

**விடைகாணும் படிகள்**

- முதலில் எண்கோட்டில் பூஜ்ஜியத்தில் தொடங்கி மிகைமுழுத் திசை நோக்கி அதாவது வலது புறமாக 8 அலகுகள் நகர வேண்டும்.
- பின்னர் (-12)-ஐக் குறிக்க 8-லிருந்து 12 அலகுகள் குறைமுழு திசை நோக்கி அதாவது இடதுபுறமாக நகர வேண்டும்.
- தற்போதைய நிலை 8 + (-12) = (-4)





8 + (-12) = (-4)

ii) எண் கோட்டைப் பயன்படுத்திக் கூட்டுக: (-3) மற்றும் (-5)

**விடைகாணும் படிகள்**

- முதலில் எண்கோட்டில் பூஜ்ஜியத்தில் தொடங்கி குறைமுழுத் திசை நோக்கி அதாவது இடது புறமாக 3 அலகுகள் நகர வேண்டும்.
- பின்னர் (-5)-ஐக் குறிக்க (-3)-லிருந்து குறைமுழுத் திசை நோக்கி அதாவது இடது புறமாக 5 அலகுகள் நகர வேண்டும்.
- தற்போதைய நிலை (-3) + (-5) = (-8)




(-3) + (-5) = (-8)

iii) (-100) + (-10)

$(-100) + (-10) = -100 - 10$

$= -(100 + 10)$

$= \boxed{-110}$

(-100) + (-10) = -110

iv) 20 + (-72)

$20 + (-72) = 20 - 72$

$= \boxed{-52}$

20 + (-72) = -52

v) 82 + (-75)

$82 + (-75) = 82 - 75$

$= 82 - 75$

$= \boxed{7}$

82 + (-75) = 7

vi) -48 + (-15)

$-48 + (-15) = -48 - 15$

$= \boxed{-63}$

-48 + (-15) = (-63)

vii) -225 + (-63)

$-225 + (-63) = -225 - 63$

$= \boxed{-288}$

-225 + (-63) = (-288)


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 1st June, 2022 :: 17:16 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**